# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 6

| | | | |
|---|---|---|---|
| Name: | அனிதாவேணி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1 to A5 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 05.11.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தூத்துக்குடி, போதைப்பொருள்நுண்ணறிவுபிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 08.10.2021 ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரில் இருந்தபோது தூத்துக்குடி மாவட்ட கியூபிரிவு ஆய்வாளர் திருமதி.விஜயஅனிதா அவர்கள் 15 வெள்ளை நிற சாக்குப்பையில் 530 கிலோ கஞ்சா , 3 செல்போன்கள், எதிரிகள்-அந்தோணிபிச்சை, லெனின்ஸ்டன், ஜெயஸ்டன், செல்வராஜ் ஆகியோர் சகிதம் கொடுத்த தனி அறிக்கையை பெற்று பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.18/2021, ச/பி, 8(c) r/w 20(b) (ii) (C), 29(1), 25 NDPS ACT ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசல் முதல் தகவல் அறிக்கை , தனி அறிக்கை மற்ற ஆவணங்களுடன் விளாத்திகுளம் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணை அதிகாரியான

ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.** 11 ஆகும்.

<u>**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எங்கள் காவல்நிலையத்தில் அன்றாடம் எத்தனை காவலர்கள் பணிக்கு வருகிறார்கள் என்பதை காட்டும் வருகை பதிவேடு உண்டு என்றால் சரிதான். யார், யார் எந்த பணியில் இருந்தார்கள் என்பதை காட்டும் பதிவேடு எதுவும் உள்ளதா என்றால் அவர்கள் என்ன பணி செய்தார்கள் என்பதை காட்டும் பதிவேடு உள்ளது. அந்த ஆவணங்களை பார்வையிடும் பட்சத்தில் யார், யார் ஆஜரில் இருந்தார்கள், எப்போது காவல்நிலையம் வந்தார்கள் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் துணை கண்காணிப்பார் உள்ளார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் எத்தனை மணிக்கு பணிக்கு வந்தேன் என்றால் வழக்கம்போல் காலை 8.00 மணிக்கு பணிக்கு வந்தேன். அன்றையதினம் காவல்நிலைய பாரா பணியில் யார் இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. அன்றுயார் யார் பணிக்கு வந்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் அனைவரும் ஆஜரில் இருந்தார்கள். எத்தனை பேர் என்றால் 11 பேர். கியூபிரிவு காவல் ஆய்வாளர் எங்கள் காவல்நிலையம் வந்து தனி அறிக்கையுடன் வழக்கு சம்பந்தமாக பொருட்களை ஒப்படைத்தாக சொல்லும் வரை இந்த வழக்கை பற்றி எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். போன் கால்ஸ் ரெக்கார்டு எங்கள் காவல்நிலையத்தில் உள்ளதா என்றால் இல்லை. தொலைபேசி அழைப்புக்களை நாங்கள் பதிவு செய்வதும் இல்லை. குற்ற வழக்கு சம்பந்தமாக தொலைபேசி அழைப்பு வந்தாலும் நாங்கள் பதிவு செய்வதில்லை என்றால் சரிதான். யார் வந்தாலும், என்ன பொருள் கொண்டு வந்தாலும் நிலைய பாராவிடம் காண்பித்து தான் காவல்நிலையத்திற்குள் கொண்டுவரவேண்டும் என்றால் சரிதான். நான் சொல்லும் 10.00 மணிக்கு ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்தாரா என்றால் அலுவலகத்தில் தான்

இருந்தார். அவருடைய உத்தரவின் பேரில் இந்த வழக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். பதிவு செய்வதற்கு முன்பாக மூடைகளை நானும், ஆய்வாளரும் எடைபோட்டு பார்த்தோமா என்றால் எடைபோட்டு பார்த்தோம். அவ்வாறு எடைபோடும் போது 1 வது மூடை எது என்றும், அதில் எவ்வளவு எடை இருந்தது என்றும் குறித்தோமா என்றால் உடனே குறிக்கவில்லை. சிறிதுநேரம் கழித்து குறித்துக்கொண்டோம். ஒவ்வொரு மூடையாக எடைபோட்டோமா, மொத்தமாக எடைபோட்டோமா என்றால் ஒவ்வொரு மூடையாக எடைபோட்டோம். ஒவ்வொரு மூட்டையிலும் எவ்வளவு எடை இருந்தது என்று குறித்தோம். எதில் குறித்து வைத்தோம் என்றால் ஒரு பேப்பரில் குறித்தோம். மூடைகளை திறந்து பார்த்தேனா என்றால் நான் திறந்து பார்த்தேன். நாங்கள் எடைபோட்ட மூடைகளில் 1 வது மூடை எது, 2 வது மூடை எது என அடையாளம் போட்டேனா என்றால் போடவில்லை. ஒரு வழக்கு சம்பந்தமான பொருட்களை பெறும் போது எந்த படிவத்தின் கீழ் அதை பெறவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். படிவம் -91 ல் பெறுவோம். இந்த வழக்கு சம்பந்தமான சொத்துக்களை நான் படிவம்-91 ல் தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. கியூபிரிவு ஆய்வாளர் ஒப்படைக்கும்போது என்னென்ன ஆவணங்கள் ஒப்படைத்தார்கள் என்றால் தனி அறிக்கை, அத்தாட்சி ஆவணங்களை ஒப்படைத்தார். மற்றவை எனக்கு ஞாபகம் இல்லை. காவல்நிலை ஆணை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நிலைஆணை பிரிவு -44 ன் படி முதல் தகவல் அறிக்கை நகலை புகார் கொடுத்தவருக்கு உடனடியாக கொடுக்கவேண்டும் என்றும் அவரிடம் கையொப்பம் பெற வேண்டும் என்றும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதல் தகவல் அறிக்கை முறையீட்டாளரிடம் கையொப்பம் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் தட்டச்சு செய்தேனா என்றால் இல்லை. அச்சுப்படிவ

முதல் தகவல் அறிக்கையில் அதை தட்டச்சு செய்தவர்கள் விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் பத்தி-9 ல் வழக்கு சொத்தைப் பற்றி நான் குறிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை எத்தனை மணிக்கு தயார் செய்து முடித்தேன் என்றால் 10.30 மணிக்குள் தயார் செய்து முடித்துவிட்டேன். முதல் தகவல் அறிக்கையில் பத்தி-13 ல் ஆய்வாளருக்கு மேல்விசாரணைக்கு பணிக்கப் பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கைது குறித்து காவல்நிலை ஆணை சொல்லும் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். கியூ பிரிவு ஆய்வாளர் வழக்கு சம்பந்தமான தனி அறிக்கையுடன் எதிரிகளை கைது செய்துதான் கொண்டுவந்தார்களா என்றால் சரிதான். Cognizable மற்றும் Non -Cognizable வழக்குகளுக்கான வேறுபாடு தெரியும் என்றால் சரிதான். கைதிகளை பெறும்போது என்ன படிவத்தின் கீழ் பெறவேண்டும், எப்படிப்பெறவேண்டும் என்ற விபரத்தை இந்த வழக்கில் கடைபிடித்தோமா என்றால் எந்த படிவத்திலும் பெறவில்லை. இதுபோன்ற குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்ட எதிரிகளை சோதனை செய்யாமல் வைத்திருப்பது காவல்நிலை ஆணைப்படி சரியா என்றால் சரியல்ல. கைதுசெய்யப்பட்டவர்களின் சம்மதத்துடன் அவர்களை சோதனை செய்து, சோதனை குறிப்பணை தயார் செய்துதான் வைத்திருந்தோம் என்றால் சரிதான். தயார் செய்த சோதனை குறிப்பாணையை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஆய்வாளர் தான் அதை தயார் செய்தார். கைது செய்யப்பட்ட எதிரிகளை பெற்று ஆய்வாளரிடம் எத்தனை மணிக்கு ஒப்படைத்தேன் என்றால் காலை 10.30 மணிக்கு ஒப்படைத்தேன். நான் 11 மணிக்கு மேல் எதிரிகளை ஒப்படைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. கியூபிரிவு ஆய்வாளர் ஒப்படைத்த குற்றவாளிகளை நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. ஆய்வாளர் எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் 10.30 மணிக்கு மேல் விசாரித்தார். அவர் விசாரிக்கும்போது நான்

இருந்தேனா என்றால் இல்லை. 10.30 மணிக்கு மேல் இந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் காவல்நிலையத்தில் நடந்த விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் முன்னரே நானும், ஆய்வாளரும் வழக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்களை எடைபோட்டு சரிபார்த்த பின்னர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தவுடன் எதிரிகளை விசாரணை செய்தாரா என்றால் விசாரணை செய்தார். அவர்களின் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தாரா என்றால் பதிவு செய்தார். பிரிவு 20(b)(ii)(C) என்பது 20 கிலோவிற்கு மேல் வைத்திருந்ததால் நான் அந்த பிரிவை குறிப்பிட்டு வழக்கு பதிவு செய்தேன். பிரிவு 25 எதை குறிப்பிடுகிறது என்றால் ஒரு வீட்டிலோ, அல்லது தனிப்பட்ட இடத்திலோ, வாகனத்திலோ போதைப்பொருள் இருந்தால் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். கியூபிரிவு ஆய்வாளர் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வரவில்லை என்றாலும் அவரிடமிருந்து நான் பெற்றதாக சொல்லக்கூடிய ஆவணங்கள் எல்லாம் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நிகழ்வுகள் இருந்திருந்தால் முறையான படிவங்களின் மூலமாக எதிரிகள் மற்றும் வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள், ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்டிருக்கும் என்றால் பெறப்பட்டிருக்கும். அப்படி சொன்னதுபோல் படிவங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால் கியூபிரிவு ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னென்ன ஆவணங்கள் கொடுத்தார் என்பதை முதல் தகவல் அறிக்கையில் காண்பித்திருப்பேன் என்றாலும் அவர்

என்னென்ன கொடுத்தார் என்று தற்போது ஞாபகம் இல்லை என்று வழக்கை அனுசரித்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் ஒப்படைக்கப்பட்ட செல்போன்களை படிவத்தில் கைப்பற்றினேனா என்றால் இல்லை. செல்போனுக்குரிய எண், விபரம், எந்த தயாரிப்பு என்ற விபரங்களை பதிவு செய்தேனா என்றால் ஞாபகம் இல்லை. எங்கள் காவல்நிலையத்திலிருந்து விளாத்திகுளத்திற்கு எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால் 2 அல்லது 2 1/2 மணி நேரத்தில் செல்லலாம். இந்த வழக்கு சம்பந்தமாக கியூபிரிவு கொடுத்த ஆவணங்கள் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். யார்மூலமாக அனுப்பி வைத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. அருகிலிருந்து தட்டச்சு செய்தவர் பெயர் என்ன என்றால் வீரதேவஜாட்டி ஆகும். இந்த குற்றத்திற்கு எந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்ற விபரம் கூட தெரியாது என்றும் பின்னிட்டு எங்கள் காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களை அனுசரித்து நான் இந்த முதல் தகவல் அறிக்கையில் கையெழுத்து செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அச்சுப்பதிவு முதல் தகவல் அறிக்கையில் பத்தி-15 ல் நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பட்டது என்ற இடத்தில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அனுப்பிய தேதி 08.10.2021 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் எப்போது விசாரித்தார் என்றால் அன்றைய தினமே விசாரித்தார். எத்தனை மணிக்கு என்று ஞாபகம் இல்லை. நான் சொன்னதேதியில் எனது வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் இருக்கும்போது காலையில் கியூபிரிவு ஆய்வாளர் இந்த பொருட்களை எப்படி கொண்டுவந்தார் என்றால் டாடாஏஸ்

வாகனத்தில் கொண்டுவந்தார். அந்த வாகனத்தின் பதிவு எண்ணோ, அதை ஓட்டி வந்த நபரின் விபரங்களையோ நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். என்னிடம் பொருட்களை ஒப்படைத்தபின்னா கியூபிரிவு ஆய்வாளர் எவ்வளவு நேரம் எங்கள் காவல்நிலையத்தில் இருந்தார் என்றால் சுமார் 1 மணிநேரம் இருந்தார். நான் சொன்னதைப்போல், சொன்ன நேரத்தில் வழக்கின் தனி அறிக்கை ஆவணங்களை பெற்றுக்கொண்டதாக சொல்வதும், அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 11 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவரால் 09.10.2021 ம் தேதி காலை 7.15 மணிக்கு புலனாய்வு அதிகாரி சித்ரா என்பவர் மூலமாக பெறப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வள்ளம் எங்களிடம் ஒப்படைத்ததற்கான குறிப்புகள் இல்லை என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை. எங்கள் காவல்நிலையத்திற்கு அருகாமையில் துாத்துக்குடியில் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் உள்ளது என்றால் சரிதான்.

<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 மற்றும் 2 ம் எதிரியின் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொல்லப்பட்டது.

<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கியூபிரிவு ஆய்வாளர் என்னிடம் ஒப்படைத்த கஞ்சா மூடைகளை கட்டி கியூபிரிவு காவல்நிலைய முத்திரை இல்லாததால் தான் அந்த மூடைகளை என்னால் பிரித்துப்பார்க்கமுடிந்தது என்றால் சரிதான். அத்தாட்சியில்(அ.சா.ஆ.3) கியூபிரிவு முத்திரை இடப்படவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியின் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொல்லப்பட்டது.

**<u>5 ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பெற்றுக்கொண்டதாக சொல்லப்படும் தனி அறிக்கையில் 5 ம் எதிரியின் பெயர் இல்லை என்றால் சரிதான். என்னால் பதிவு செய்ததாக சொல்லப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் 5 ம் எதிரியின் பெயர் இல்லை என்றால் சரிதான். 5 ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 5 ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.